සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

ඉන්දීය ඉතිහාසය II (I කොටස)
இந்திய வரலாறு II (பகுதி I)
History of India II (Part I)

25 A | T | II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**இந்திய வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி 1206 வரை**

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள் :**

※ இவ்வினாத்தாள் பகுதி **I**, பகுதி **II** ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டது.

※ பகுதி **I** இல் **1 - 40** வரையான எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய விடைகளை எழுதுக.

※ பகுதி **I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.

※ இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலங்களாகும். விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி **I** இற்கான விடைத்தாள்களை பகுதி **II** இற்கான விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

## பகுதி I

● **1** தொடக்கம் **10** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் பொருந்தாது உள்ளது. அந்தப் பொருந்தாத பெயரை இனங்கண்டு, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

**1.** (1) சுப்பாரக (2) தாமிரலிப்தி (3) சாஞ்சி (4) பாருகச்ச (5) காவேரிபட்டினம் (......)

**2.** (1) கிருஷ்ணா (2) தப்தி (3) துங்கபத்திரா (4) கோதாவரி (5) மகாநதி (......)

**3.** (1) காஞ்சிபுரம் (2) தஞ்சாவூர் (3) மதுரை (4) தானேஷ்வர் (5) விஜயநகர் (......)

**4.** (1) தோசலி (2) சுவர்ணகிரி (3) உஜ்ஜைனி (4) தக்சிலா (5) காம்போஜ (......)

**5.** (1) அங்க (2) மகத (3) காசி (4) வஜ்ஜி (5) கோசல (......)

**6.** (1) சாமந்த (2) சாம்ராட் (3) விராட் (4) இராஜாதிராஜ (5) அதிராஜ (......)

**7.** (1) மேகதூதம் (2) மிருச்சகடிகம் (3) இருதுசங்காரம் (4) இரகுவம்சம் (5) குமாரசம்பவம் (......)

**8.** (1) வத்சராஜா (2) யசோதர்மன் (3) துருவன் (4) நாகபட்ட (5) தர்மபாலன் (......)

9. (1) ஏரியா (2) அரகோஷியா (3) எரித்திரியா
(4) பரோபனிசதெ (5) கெட்ரோஷியா (......)

10. (1) பல்லவர் (2) சோழர் (3) பாலர்
(4) பாண்டியர் (5) சேரர் (......)

● 11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச் சொற்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு, அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.

11. (1) காரவேல - ஹதிகும்பா
(2) உருத்திரதாமன் - ஜுனாகார்ட்
(3) ஹர்ஷவர்தனன் - மன்சேகரா
(4) முதலாம் புலிகேசி - ஐஹோல்
(5) முதலாம் இராஜேந்திரன் - திருவனந்தபுரம் (......)

12. (1) அங்க - சம்பா
(2) காசி - பாரனாசி
(3) லிச்சவி - வைசாலி
(4) குறு - பாஞ்சால
(5) வத்ச - கௌசாம்பி (......)

13. (1) கபிலவஸ்து - சாக்கியர்
(2) மிதிலை - விதேஹர்
(3) இராமகிராம - மல்லர்
(4) பிப்பிலிவன - மௌரியர்
(5) அல்லகப்ப - புல்லியர் (......)

14. (1) பிம்பிசார - ஹரியங்க
(2) உதாயின் - சிசுநாக
(3) தனநந்த - நந்த
(4) குணால - மௌரிய
(5) புஷ்யமித்திர - சுங்க (......)

15. (1) பாரவி - கிராதார்ஜுனிய
(2) விசாகதத்தர் - முத்திரராக்ஷய
(3) வராகமிஹிரர் - பிருகத்சம்ஹிதா
(4) காளிதாஸர் - ரத்னாவலி
(5) ஆர்யபட்டர் - சூர்ய சித்தாந்தம் (......)

● 16 தொடக்கம் 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் X, Y என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. Y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் X நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் தரப்படவில்லை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தின் இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.

16.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | தண்டின் | A | மத்தவிலாச பிரகாசனம் |
| (ii) | மகேந்திரவர்மன் | B | கதாசரித்சாகர |
| (iii) | சோமதேவ | C | தசகுமாரசரிதம் |
| (iv) | கல்ஹன | D | நாகாநந்த |
| (v) | ஹர்ஷவர்தன | E | இராஜதரங்கினி |

(1) ACDBE (2) BDCAE (3) CABED (4) CBAED (5) DCEBA (......)

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



0488

17.

| X | Y |
|---|---|
| (i) பிந்துசார | A கவிராஜ் |
| (ii) அசோகன் | B தக்ஷிணாபதநாதன் |
| (iii) சமுத்திரகுப்தன் | C தேவநம்பிய |
| (iv) தந்திதுர்க | D அமித்ரகாத |
| (v) முதலாம் சாதகர்ணி | E பரமபட்டாரக |

(1) BCAED (2) CADEB (3) CBADE (4) DBACE (5) DCAEB (......)

18.

| X | Y |
|---|---|
| (i) இந்திரப் பிரஸ்தம் | A யமுனா |
| (ii) பாருகச்சா | B கங்கா |
| (iii) ரூபார் | C சட்லெஜ் |
| (iv) கனோஜ் | D நர்மதா |
| (v) ஹரப்பா | E ராவி |

(1) ACBDE (2) ADCBE (3) BDACE (4) CBAED (5) DACBE (......)

19.

| X | Y |
|---|---|
| (i) மதுரை | A முதலாம் புலிகேசி |
| (ii) வாதாபி | B ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன் |
| (iii) புருஷபுர | C சமுத்திர குப்தன் |
| (iv) பாடலி புத்திரம் | D கனிஷ்க |
| (v) தஞ்சாவூர் | E முதலாம் இராஜராஜன் |

(1) ABEDC (2) ADEBC (3) BACED (4) BADCE (5) CADEB (......)

20.

| X | Y |
|---|---|
| (i) மகாகாந்தார | A உக்கிர சேனன் |
| (ii) கொட்டுற | B தமன |
| (iii) எரந்தபல்ல | C ஸ்வாமிதத்த |
| (iv) பாலக்க | D ஹஸ்தி வர்மன் |
| (v) வெங்கி | E வியாக்கிரராஜ |

(1) ECBAD (2) ECDAB (3) EDABC (4) EDCAB (5) EDCBA (......)

● **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது.** அதனைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரேயுள்ள **அடைப்புக் குறியினுள்** எழுதுக.

**21. பிம்பிசார மன்னன்**
(1) புத்தர் காலத்தில் மகதத்தை பிம்பிசார மன்னன் ஆட்சி செய்தான்.
(2) பிம்பிசார மன்னன் பாரசீகத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தான்.
(3) பிம்பிசார மன்னன் ஆட்சிக்காலத்தில் இராஜகிருகம் மகதத்தின் தலைநகராக இருந்தது.
(4) பிரம்மதத்த மன்னனைத் தோற்கடித்த பின்னர் பிம்பிசாரன் அங்க ஜனபதயவையும் தனது இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டான்.
(5) பிம்பிசாரனின் முக்கிய அரசிகள் கோசலதேவி, செல்லனா, கேமா ஆகியோர் ஆவர் (......)

**22. சக்கர்கள்**
(1) சக்கர்கள் மத்திய ஆசியாவில் இருந்து புலம்பெயர்ந்த நாடோடிக் கூட்டத்தினர் ஆவர்.
(2) சக்கர்களின் கீழிருந்த பிரதேசங்கள் ஷத்திரப எனப் பிரிக்கப்பட்டிருந்தது.
(3) தக்ஷிலாவின் ஆரம்ப சக்க ஆட்சியாளன் மாவூஸ் ஆவார்.
(4) உருத்திரதாமன் உஜ்ஜைனியின் மகாஷத்திரப்ப ஆவார்.
(5) சக்கர்களைத் தோற்கடித்து குஜல கட்பயிசீஸஸ் அதிகாரத்துக்கு வந்தான். (......)

[பக். 4 ஐப் பார்க்க

**23.** சுங்கர்கள்

(1) பிருகத்த மன்னனைக் கொன்று புஷ்யமித்திர சிம்மாசனத்தைக் கைப்பற்றினான்.
(2) சுங்கர்கள் பிராமண வம்சத்தவர் ஆவர்.
(3) இலக்கண வித்தகரான பதஞ்சலி புஷ்யமித்திரரின் சமகாலத்தவர் ஆவார்.
(4) பாரூத் தூபியின் கைப்பிடிச்சுவர் சுங்க ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது.
(5) இந்து - கிரேக்கர்கள் கடைசி சுங்க அரசனைத் தோற்கடித்து அந்த இராசதானியைக் கைப்பற்றிக் கொண்டனர். (……)

**24.** மினந்தர்

(1) அலெக்சாந்தரை விட அதிகளவிலான நாடுகளை மினந்தர் கைப்பற்றினர் என்று ஸ்ராபோ குறிப்பிட்டுள்ளார்.
(2) மினந்தர் பௌத்தர் ஆவார்.
(3) மினந்தரின் இராச்சியத்தின் தலைநகர் சாகல ஆகும்.
(4) அவர் வெளியிட்ட நாணயங்கள் சிலவற்றில் புத்தரின் உருவம் காணப்படுகின்றது.
(5) மிலிந்தபக்ஞவில் மினந்தர் மன்னனால் நாகசேன தேரரிடம் பௌத்தம் பற்றி கேட்கப்பட்ட வினாக்கள் சில உள்ளடங்கியுள்ளன. (……)

**25.** நந்தர்கள்

(1) நந்த அரச வம்சத்தின் தாபகரான மகாபத்ம நந்தனால் சிசுநாக அரசவம்சம் ஆட்சியிலிருந்து நீக்கப்பட்டது.
(2) மகாபத்ம நந்தன் மகா அலெக்சாந்தரின் சமகாலத்தவர் ஆவார்.
(3) மகாபத்ம நந்தனின் பின்னர் அவனது எட்டு புத்திரர்கள் அதிகாரத்தில் இருந்தனர்.
(4) நந்தர்களின் இராணுவ பலம் காரணமாக மகா அலெக்சாந்தர் அவனது யுத்த நடவடிக்கைகளை பியஸ் நதிக்கு அப்பால் முன்னெடுத்துச் செல்லவில்லை.
(5) சாணக்கியனின் உதவியுடன் சந்திர குப்த மௌரியனால் கடைசி நந்த மன்னன் விரட்டியடிக்கப்பட்டான். (……)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் ………………………………… **1** எனவும்
**(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ………………………………… **2** எனவும்
**(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ………………………………… **3** எனவும்
**(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின் ………………………………… **4** எனவும்
**வேறு** விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் ………. **5** எனவும்

அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரி | **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரி | **வேறு** விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26.** தக்ஷிலா

(A) தக்ஷிலா காந்தாரத்தின் தலைநகராகும்.
(B) தக்ஷிலா புகழ்பெற்ற கல்வி நிலையமாகும்.
(C) தக்ஷிலா ஆட்சியாளரான ஆம்ஹி மன்னன் மகா அலெக்சாந்தரை வரவேற்று அவருக்குத் தனது படை வீரர்களின் சேவைகளையும் வழங்கினான்.
(D) தக்ஷிலாவின் இளவரசனான அசோகன் உஜ்ஜைனிக்கு சுசீமாவின் கலவரத்தை அடக்குவதற்காக மாற்றப்பட்டார். (……)

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**27.** பாஹியன் தேரர்

(A) பாஹியன் தேரர் இந்தியாவுக்குள் தீபெத்தினூடாக உட்புகுந்தார்.

(B) பாஹியன் தேரர் இந்தியாவுக்கு பௌத்த நூல்களைப் பெறுவதற்கும் பௌத்த வழிபாட்டிடங்களை வணங்குவதற்குமாக வந்தார்.

(C) சீனாவுக்கு செல்வதற்கு முன்னர் பாஹியன் தேரர் இலங்கைக்கு வந்தார்.

(D) பாஹியன் தேரர் கனோஜ் மகாநாடு பற்றி விரிவான அறிக்கையொன்றினை வழங்கியுள்ளார். (……)

**28.** ஸ்கந்த குப்தன்

(A) ஸ்கந்த குப்தன் ஹூணர் ஆக்கிரமிப்பை விரட்டியடிப்பதில் வெற்றி கண்டான்.

(B) ஸ்கந்த குப்த மன்னன் காலத்தில் கிர்நார் ஏரியின் அணைக்கட்டு புனருத்தாரணம் செய்யப்பட்டது.

(C) ஸ்கந்த குப்த மன்னனால் புகழ்மிக்க பௌத்த கல்வி நிலையம் நாலந்தாவில் தாபிக்கப்பட்டது.

(D) குப்தர்களுக்கும் வாகடகார்களுக்கும் இடையிலான திருமண தொடர்புகள் ஸ்கந்த குப்தன் மன்னன் காலத்தில் இடம்பெற்றது. (……)

**29.** மேலைச் சாளுக்கியர்

(A) மேலைச் சாளுக்கியர்களின் தலைநகரம் வாதாபி ஆகும்.

(B) மேலைச் சாளுக்கிய அரச பரம்பரையின் தாபகர் முதலாம் புலிகேசி ஆவார்.

(C) ஹர்ஷவர்தனின் தென்பகுதி ஆக்கிரமிப்பை விரட்டியடிக்க இரண்டாம் புலிகேசிக்கு இயலுமாக இருந்தது.

(D) இரண்டாம் புலிகேசியின் காலத்தில் பாஹியன் மேலைச் சாளுக்கிய இராச்சியத்துக்கு வருகை தந்திருந்தார். (……)

**30.** பாண்டியர்

(A) தனது தென் எல்லையிலிருந்த சாம்ராச்சியத்தின் சுதந்திரமான இனம் பாண்டியர் என்று அசோக மன்னனின் பாறைக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(B) முதல் பாண்டிய சாம்ராச்சியத்தின் தாபகர் கடுங்கோன் ஆவார்.

(C) முதலாம் பராந்தகனால் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் அரசு கைப்பற்றப்பட்டதன் காரணமாக அவன் இலங்கைக்குத் தப்பியோடினான்.

(D) மாறவர்மன் இராஜசிம்மனால் இலங்கை ஆக்கிரமிக்கப்பட்டது. (……)

● **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**31.** கரோஷ்டி எழுத்துகளினால் எழுதப்பட்ட அசோக பேரரசனின் கல்வெட்டு எது?

(1) கிர்நார் பாறைக் கல்வெட்டு
(2) தௌலி கல்வெட்டு
(3) பராபர் குகைக் கல்வெட்டு
(4) டில்லி - தொப்ரா தூண் கல்வெட்டு
(5) ஷபாஸ்கரி பாறைக் கல்வெட்டு (……)

**32.** 'இன்டிகா' நூலின் ஆசிரியர் யார்?

(1) ஏரியன்
(2) மெகஸ்தினீஸ்
(3) ஜஸ்டின்
(4) ஸ்ட்ராபோ
(5) தொலமி (……)

**33.** சாத்தவாகன அரச வம்சத்தின் தாபகர் எனக் கருதப்படுபவர் யார்?

(1) வாசுதேவ
(2) சிமுக
(3) கிருஷ்ணா
(4) சுசர்மன்
(5) முதலாம் சாதகர்ணி (……)

**34.** குப்த அரசிளங்குமாரியான பிரபாவதி குப்தாவைத் திருமணம் செய்த வாகடக ஆட்சியாளர் யார்?

(1) விந்தியாசக்தி
(2) பிரவரசேன
(3) இரண்டாம் உருத்திர சேனன்
(4) ஹரிசேன
(5) முதலாம் பிருத்விசேன (……)

[பக். 6 ஐப் பார்க்க

**35.** ஹர்ஷவர்தன மன்னனால் எழுதப்பட்ட இலக்கிய ஆக்கம் எது?
(1) ஹர்ஷ சரித (2) பிரியதர்சிகா (3) சாகுந்தலம்
(4) அமரகோச (5) விக்கிரமோர்வசி (……)

● **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும். **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதாக இருப்பதுடன் **முதலாவது** கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | இருக்கு வேதம் மிகப் பழைய வேத நூலாகும். | இருக்கு வேத காலத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்வு சுதாஸினால் விஸ்வமித்திரனின் வழிகாட்டலினால் செயற்பட்ட குழு போரில் தோற்கடிக்கப்பட்டமை ஆகும். | (……) |
| **37.** | கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் நிலவிய 16 மகாஜனபத பற்றிய தகவல்களை அங்குத்தர நிகாய வழங்குகின்றது. | 16 ஜனபதங்களில் சில அரசனால் ஆட்சி செய்யப்பட்டன ஏனையவை கண இராச்சியங்களாக இருந்தன. மிகவும் பலம் வாய்ந்த இராச்சியங்கள் வத்ஸ, அவந்தி, கோசல, மகத ஆகும். லிச்சவிகளின் ஆட்சிக்குழு 7707 மன்னர்களைக் கொண்டிருந்தது எனக் கூறப்பட்டுள்ளது. | (……) |
| **38.** | கி.மு. 326 இல் மகா அலெக்சாந்தர் இந்தியாவை கைபர் கணவாயினூடாக ஆக்கிரமிப்புச் செய்தான். | மகா அலெக்சாந்தருக்கு வட இந்தியாவை கங்கை நதி வரை மட்டுமே ஆக்கிரமிப்புச் செய்ய முடிந்தது. | (……) |
| **39.** | மகாபலிபுரம் நகர் மகேந்திரவர்மனால் தாபிக்கப்பட்டது. | பல்லவ கட்டிடக்கலையில் இரதங்களை அறிமுகம் செய்த பெருமை மகேந்திர வர்மனுக்கே உரித்தானதாகும். | (……) |
| **40.** | புகழ்பெற்ற தக்ஷிலா பௌத்த பல்கலைக்கழகம் தர்மபால மன்னனால் தாபிக்கப்பட்டது. | தர்மபாலவினால் இந்திராயுத விரட்டியடிக்கப்பட்ட பின்னர் கனோஜ் சிம்மாசனத்தில் சக்கராயுத அமர்த்தப்பட்டான். | (……) |

* *

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

ඉන්දීය ඉතිහාසය II (II කොටස)
இந்திய வரலாறு II (பகுதி II)
History of India II (Part II)

25 A T II

**இந்திய வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி 1206 வரை**

**அறிவுறுத்தல்கள் :**

- ※ நான்கு வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.
- ※ பகுதி **II** ஆனது **A, B, C** ஆகிய **மூன்று** பகுதிகளைக் கொண்டது.
- ※ பகுதி **A** இன் வினா கட்டாயமானது.
- ※ பகுதி **B, C** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினாவையேனும் தெரிவுசெய்து, **மேலும் மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **இந்தியாவின் புறவுருவப்படம்** பகுதி **I** உடன் வழங்கப்பட்டுள்ளது.)

## பகுதி A

**1.** உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

(i) சுலைமான் மலைத்தொடர் (ii) ஹரப்பா (iii) பரோடா கணவாய்
(iv) யமுனா நதி (v) சௌராஷ்டிரா (vi) நர்மதா நதி
(vii) சுப்பாரக (viii) அமராவதி (ix) கிருஷ்ணா நதி
(x) காஞ்சிபுரம் (xi) கௌசாம்பி (xii) தார் பாலைவனம்

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு **01** புள்ளி வீதம்)

## பகுதி B

**2.** "சிந்துவெளி நாகரிகத்தின் ஆரம்பம், வீழ்ச்சி என்பன பற்றி நிச்சயமாகத் தீர்மானிக்க முடியாது." பின்வரும் கருப்பொருள்களின் கீழ் இக்கூற்றினைக் கலந்துரையாடுக.

(i) சிந்துவெளி நாகரிகத்தின் ஆரம்பம் பற்றி நிலவும் பல்வேறு கருத்துகள். (08 புள்ளிகள்)
(ii) சிந்துவெளி நாகரிகம் வீழ்ச்சியடைந்த விதம். (08 புள்ளிகள்)

**3.** கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் நிலவிய அரசியல், சமய நிலைமைகளைப் பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)

**4.** "மௌரிய சாம்ராச்சியம் முன்னிருந்த பல அரசவம்சங்களினால் பின்பற்றப்பட்ட பெருமளவு கொள்கைகளின் விளைவு ஆகும்."

(i) மகதத்தை மையமாகக் கொண்டு இராச்சியத்தை ஆரம்பித்த முதல் ஆட்சியாளரின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)
(ii) மௌரியர்களுக்கு முன் மகதத்தை ஆட்சிசெய்த **இரண்டு** அரச பரம்பரைகளின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(iii) மௌரியர்களுக்கு முன்னிருந்த அரச பரம்பரையினரால் சாம்ராஜ்யத்துக்குத் தேவையான அத்திவாரம் இடப்பட்ட முறையினைப் பரிசீலிக்குக. (05 புள்ளிகள்)
(iv) மகதத்தை மையமாகக் கொண்ட சாம்ராச்சிய விரிவாக்கத்தில் மௌரிய அரசர்களால் பின்பற்றப்பட்ட நடவடிக்கைகளை பரிசீலிக்குக. (08 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

**5.** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) வடமேற்கு தேச எல்லைகள்

(ii) வர்ணாசிரம தர்மம்

(iii) மகா அலெக்சாந்தர்

(iv) குஷாணரின் கீழ் பௌத்தம்

(08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** "சமுத்திர குப்தனின் திக்விஜய கொள்கை II ஆம் சந்திரகுப்தனால் பூர்த்தியாக்கப்பட்டது." கலந்துரையாடுக. (16 புள்ளிகள்)

**7.** சோழர்களின் பிரதேச நிர்வாகம், கிராம நிர்வாகத்தின் முக்கிய அம்சங்களைப் பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)

**8.** "தென்னிந்திய கலாசார வரலாற்றில் பல்லவ கலாசாரம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது."

(i) சமுத்திர குப்த மன்னனால் தோற்கடிக்கப்பட்டு பின்னர் அரசுரிமையைப் பெற்றுக் கொண்ட பல்லவ மன்னனின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(ii) பல்லவ இராச்சியத்தின் தலைநகரத்தின் பெயரைத் தருக. (01 புள்ளி)

(iii) பல்லவ இராச்சியத்தைக் கட்டியெழுப்புவதில் மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆகியோரின் பங்களிப்புகளைப் பரிசீலிக்குக. (04 புள்ளிகள்)

(iv) இலக்கியம், சமயம், கலை, கட்டிடக்கலை ஆகிய துறைகளில் பல்லவர்களின் பங்களிப்பைப் பற்றிக் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) அலகபாத் பிரசஸ்தி

(ii) குப்தர் காலத்தில் இலக்கியம்

(iii) அரேபிய ஆக்கிரமிப்பு

(iv) வங்காளத்தில் பாலர்கள்

(08 × 2 = 16 புள்ளிகள்)

* * *

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

0488

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka


අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

ඉන්දීය ඉතිහාසය II
இந்திய வரலாறு II
History of India II

25 A T

ප්‍රශ්න අංකය
வினா இல.
Question No. 1

විභාග අංකය
சுட்டெண்
Index No. ..............................



LOL Book Store

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

# 25% OFF ALL BOOKS

**Including Exercise Books, CR Books, and B5 Books**




ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්

**ORDER BOOKS FROM LOL BOOKS STORE**

0372060110 **WWW.LOL.LK**

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**


ORDER GCE A/L
SHORT NOTES, MODEL,
REVISION BOOKS & PAST
PAPERS IN SINHALA, ENGLISH
& TAMIL MEDIUM
LOL
BOOK
STORE
CASH ON DELIVERY
AND KOKO PAYMENT
AVAILABLE
WHATSAPP - 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls
WITH LOL BOOK STORE!